IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, ALANGUDI

**Deposition of witness**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**STC No.223/2025**

**Deposition of witness for PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | தந்தை பெயர் | : | சுப்ரமணியன் |
| கிராமம் | : | கச்சிரான்பட்டி | மாவட்டம் | : | புதுக்கோட்டை |
| வயது | : | 45 | தொழில் | : | |

Solemnly affirmed by Selvi.B.Sendhurdevi, Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**(Accused A1 to A4 present.Both side Counsel Present) (Date: 09.06.2026)**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aadhaar Card of Witness verified.**

**<u>முதல்விசாரணை</u>**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 16.04.2025 அன்று எங்கள் வீட்டின் சுவர் ஓரமாக JCB யை கொண்டு குப்பைகளை அள்ளிக்கொண்டிருந்தார். நான் அருகே வீடு கட்டுவதற்காக ஜல்லிகற்களை கொட்டி வைத்திருந்தேன். ஜேசிபியை கொண்டு குப்பை குப்பை அள்ளும்போது ஜல்லிகற்கள் சரிந்து விழுந்து விட்டது அதனால் ஜேசிபி டிரைவரிடம் சொல்லி அதனை சரி செய்து வைக்குமாறு சொன்னேன். அந்த சமயத்தில் பழனியாண்டி மகன் தனசேகரன் தகாத வார்த்தைகளால் தேவடியா பயலே என்று சொல்லி என்னை செருப்பால் அடித்து சென்று விட்டார். மாலையில் வேலை விட்டு வந்த எனது அம்மா தனசேகரனிடம் எதற்காக எனது மகனை அடித்தீர்கள் என்று கேட்டபோது எதிரிகள் நால்வரும் சேர்ந்து எனது அம்மாவை கம்பால் அடித்து காயப்படுத்தி மயங்கி விழுந்துவிட்டார். அதனால் நாங்கள் இருவரும் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக சென்றோம். அங்கு வந்து போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என்னை விசாரித்தார்கள்

எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு படித்துள்ளேன். கொஞ்சம் எழுதப் படிக்க வரும். எதிரிகள் அனைவரும் எனது பங்காளிகள் என்று சொன்னால் சரிதான் எதிரிகள் நீண்ட நாட்களாக நான் சொல்லும் இடத்தில் தான் குப்பை கொட்டி அள்ளி வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். நான் அரசு விதிமுறைகளுக்கு புறம்பாக மதுபானம் பெற்றதாக என் மேல் வழக்கு உள்ளது என்று சொன்னால் இல்லை நான் பொய் சொல்கிறேன் என்றும் நான் சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததாக என் மீது வழக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல எதிரிகள் அவர்களது இடத்தில் குப்பை அள்ளும் பொழுது மது பாட்டில்கள் இருந்ததால் என்னிடம் அது பற்றி கேட்டனர் என்றால் சரியல்ல அவ்விடத்தில் மூன்றாம் நபர்கள் மது அருந்திவிட்டு பாட்டில்களை போட்டு சென்றிருக்கலாம் எதிரிகள் மேற்படி மதுபாட்டில்கள் கிடப்பது பற்றி என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று சம்பவத்திலிருந்து சுமார் அரை மணி நேரத்தில் ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு வந்திருப்பேனா என்றால் கால் மணி நேரத்தில் வந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த பின்பு சுமார் அரை மணி நேரத்தில் காவல் துறையினர் என்னை வந்து விசாரித்தனர் என்று சொன்னால் ஒரு மணி நேரம் கழித்து காவல் துறையினர் என்னை விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்து பேப்பரில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் வாக்குமூலம் சொன்னேன் எழுதிக் கொண்டார்கள் 16.4.2025 ஆம் தேதியே எழுதிக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான் நான் போலீஸாரிடம் குப்பை அள்ளிய போது என்னை அசிங்கமாக பேசி அடித்ததாக சொல்லி உள்ளேன்என்றால் சரிதான் மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்த பின்பு மீண்டும் என்னை விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் நான் மருத்துவமனையில் சேர்ந்த நாளான 16.04.2025 ஆம் தேதியிலேயே போலீசார் விசாரித்தனம் என்று சொன்னால் சரிதான் பட்டியல் சாட்சி இரண்டு மற்றும் மூன்று உள்ள நபர்கள் எனது அம்மா மற்றும் மனைவி என்றால் சரிதான் பட்டியல் சாட்சி நான்காக காண்பிக்கப்பட்டுள்ள நபர் எனது மனைவியின் தம்பி ஆவார் நான் சொல்வது போல் எதிரிகள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் பேசவில்லை என்றும் அடிக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல நான் பாட்டில்களை விற்று பாட்டில்களை எதிரிகள் உபயோகிக்கும் குப்பை உள்ள இடத்தில்

போட்டதால் அது பற்றி எதிரிகள் என்னிடம் கேட்டதால் அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சி அதை படித்துப் பார்த்து சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு அவரால் கையொப்பமிடப்பட்டது**

**மாவட்ட உரிமையியல் மற்றும்**

நீதித்துறை நடுவர்,

**ஆலங்குடி(பொறுப்பு)**